மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11–40

(ஆ) நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஆ) சென்னை மத்திய சிறை கைதிகள் கோரிக்கைகளுக்காக, நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது குறித்து சட்ட அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க அனுமதி கோரி உள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த அறிவிப்பினை இப்போது பேரவைக்கு வைப்பார்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் சென்னை மத்தியச் சிறைச்சாலையில் சிறைவாசிகள் 13-3-1995 அன்று உண்ணாவிரதம் இருந்ததற்கான விவர அறிக்கை.

சென்னை மத்தியச் சிறைச்சாலையில் 13-3-1995 அன்று காலையில் 1765 சிறைவாசிகள் சிறையில் இருந்தனர். அவர்களுள் 1,477 பேர் 13-3-1995 அன்று காலை முதல் உணவு உண்ண மறுத்துவிட்டனர். சிறைத் துறைத் துணைத் தலைவர், சிறைத்துறைக் கண்காணிப்பாளர் மற்றும் சிறை அதிகாரிகள் சிறைவாசிகளிடம் விதிமுறைகளைக் கூறி உணவு உண்ணும்படிக் கேட்டுக் கொண்டனர். அதற்குச் சிறைவாசிகள் கீழ்க்கண்ட தங்களுடைய கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரை தாங்கள் உணவு உண்ணாது இருக்கப் போவதாகக் கூறினார்கள்.